விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 213 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 04 புதன்கிழமை (20.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## இலங்கைக்கு உதவத் தயார்

### அமெரிக்க தூதுவர் மீண்டும் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு அமெரிக்கா உதவத் தயாராகவுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத்

11

## வாக்குச் சீட்டை படம் பிடித்தால்

### 7 வருடங்களுக்கு தடை


(கொழும்பு)

இடைக்கால ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பு இன்று பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இரகசிய வாக்கெடுப்பு என்பதால்

11

# நாட்டின் அடுத்த ஜனாதிபதி யார்?



- ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு இன்று
- ரணில், டலஸ், அநுர களத்தில்
- டலஸுக்கு ஆதரவு தெரிவித்து வேட்பு மனுவில் இருந்து விலகினார் சஜித்
- டலஸ் ஜனாதிபதியானால் சஜித்தே பிரதமர் என பெரமுன அறிவிப்பு
- பாராளுமன்றத்தில் இன்று காலை 10 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்படும்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் கலாசாரத்தை மாற்ற அனைவரும் ஒன்றிணைக

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

*(கொழும்பு)*

**இலங்கையின் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க அனைவரும் ஒன்றிணையவேண்டிய தருணம் இதுவென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



ஜனாதிபதி வேட்பாளர் டலஸ் அழகப்பெருமவுடன் இணைந்து விசேட காணொளியொன்றை வெளியிட்டே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், நாட்டிலுள்ள மக்கள்

11

### பாராளுமன்ற வீதியில்

## ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்குத் தடை

(கொழும்பு)

பாராளுமன்ற வீதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்குத் தடை விதித்து கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

முதலிகே வசந்த குமார, கல்வெவ சிறிதம்ம தேரர் மற்றும் பெயரிடப்பட்ட 14 பேருக்கு எதிராக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வீதிகளில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படுவதால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படக் கூடும் என வெலிக்கடை பொலிஸார் விடுத்த

11

## டலஸை ஆதரிப்பதற்கு கூட்டமைப்பு தீர்மானம்

### எழுத்து மூலம் உறுதி வழங்கியதாகத் தகவல்

(கொழும்பு)

நேரில் வழங்கிய வாக்குறுதியின் தொடராக பாராளுமன்றத்தில் இன்று நடைபெறவுள்ள புதிய ஜனாதிபதித் தெரிவுக்கான வாக்கெடுப்

02



## நாட்டை மீட்க ஒரு கட்சியாலோ தனித் தலைவராலோ முடியாது

### ஜனாதிபதி வேட்பாளர் டலஸ் அழகப்பெரும



(கொழும்பு)

நாட்டு மக்களின் பிரதான கோரிக்கையை பாராளுமன்றில் உள்ள பெரும்பாலானவர்கள் விளங்கிக்கொள்ளவில்லை. தற்போதைய நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்க ஒரு கட்சியாலோ, தனித் தலைவராலோ முடியாது.

சகல தரப்பினரும் நாட்டுக்காக

11

### எதிர்வரும் 25 ஆம் திகதிமுதல்

## நாடளாவிய ரீதியில் எரிபொருள் விநியோகம்

### QR முறையும் அறிமுகம்

(கொழும்பு)

எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் QR குறியீட்டு முறையும் அறிமுகப்படுத்தப் படவுள்ளதாக எரிசக்தி

11

### பாடசாலைகளுக்கான

## விடுமுறை மேலும் நீடிப்பு

(கொழும்பு)

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற அனைத்து தனியார் பாடசாலைகளுக்கான விடுமுறை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

11

## டலஸிற்கு வெற்றி வாய்ப்பு அதிகம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தெரிவில் டலஸ் அழகப்பெரும வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பின்போது டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு வழங்குவதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி தீர்மானித்துள்ளது.

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டலஸை...

பின்போது டலஸ் அழகப்பெருமவை ஆதரித்து வாக்களிக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் அதன் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நேற்றிரவு நடைபெற்றது.

கொழும்பிலுள்ள சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர் ஜி.எல். பீரிஸ், வேட்பாளர் டலஸ் அழகப்பெரும மற்றும் சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா ஆகியோர் கலந்துகொண்டு கூட்டமைப்பினருக்கு வழங்கிய உறுதிமொழியையடுத்தே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஜனாதிபதி வேட்பாளர் உள்ளிட்ட சஜித் அணியினர் கூட்டமைப்பிடம் எழுத்து மூலம் உறுதிமொழி வழங்கி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி வேட்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவிற்கு ஆதரவு வழங்குவதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருமித்த ஆதரவுடன் ஜனாதிபதி வேட்பாளர் டலஸ் அழகப்பெரும வெற்றி பெறும்போது நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் போது கூட்டமைப்பினர் முன்வைத்த நிபந்தனைகளான அரசியல் கைதிகளின் விடுதலை, காணி அபகரிப்பு, மக்களின் காணிகளில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும், தொல்பொருள் திணைக்களம் என்ற பெயரில் காணி அபகரிப்பு, உடனடியாக அரசியல் தீர்வுக்கான பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டது.

குறித்த கோரிக்கைகளுக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக சஜித் அணியினர் எழுத்து மூலம் வழங்கியுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதி வேட்பாளர் டலஸ் அழகப்பெருமவுக்கு பூரண ஆதரவு வழங்குவதாக முடிவு எடுத்துள்ளனர். (ம-7)


# பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனமொன்றுக்கு பின்வரும் உத்தியோகத்தர் தேவை.

❖ **பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் (பெண்கள்)**

சிங்களத்தில் சரளமாக பேசக் கூடியவர்களுக்கு முன்னுரிமை

யாழ். நகரத்திலிருந்து 6 கிலோமீற்றர் தூரத்திற்குள் இருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**076 097 3121**


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 20.06.2022 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

## இராசரத்தினம் நாகலக்சுமி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 18.07.2022 திங்கட்கிழமை காலை 9 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (20.07.2022) புதன்கிழமை பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகவும் தொலைபேசி, தொலைநகல் வாயிலாகவும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள், மலர் வளையங்கள் மூலமாகவும் மலர்மாலைகள் சாத்தியும் அஞ்சலி செலுத்தி ஆறுதல்களையும் அனுதாபங்களையும் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இருபாலை கிழக்கு,
கோப்பாய். (12083)

குடும்பத்தினர்
R.சசிதரன்

# விண்ணக வாழ்வில் 31ஆம் நாள்

## நினைவலைகள்



தோற்றம் 02 - 06 - 1941

மறைவு 20 - 06 - 2022

அமரர்

## இராசேந்திரம் எலிசபேத்தம்மா

"நீரே என் புகலிடம் என் அரண்
நான் நம்பியிருக்கும் இறைவன்" தி.பா.91:2

அன்பின் தாய்வேரே!
எமக்கு அன்னையாய் கிடைத்தவளே
கண்விட்டு மறையாமல் இருக்கின்றது
கண்முன்னே எம் அன்னை
எம்முடன் வாழ்ந்திட்ட காலங்கள்

இன்று கனவாகிப் போனதே – எம்மை
அவள் அன்பினில் கனிய வைத்த நேரங்கள்....
இன்று கடவுளுக்குக் கிடைத்ததோ – எம்
அன்னையின் அன்பு, பாசங்கள்

விண்ணோக்கிச் சென்றாலும்
மண்ணோடு வாழ்ந்த காலங்கள் மறையாமல் என்றும்
மனதோடு வாழுமே...
இன்றும் என்றும் எங்கள் அன்பின் அன்னையே
இறைவனில் நீர் இளைப்பாறும்....!

லூர்த்து மாதா கோவிலடி,
தும்பளை, பருத்தித்துறை. (C-4630)

குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு

## நினைவஞ்சலி



பிறப்பு 14.11.1954

இறப்பு 20.07.2021

தொண்டைமானாறைப் பிறப்பிடமாகவும்
கதிரிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் **பழனிவேல் ஜெயந்தி (பேபி)**

காயங்கள் ஆறிப் போகும்
கனவுகள் கலைந்து போகும் – ஆனால்
என்றுமே மாறாமல் இருப்பது
தாய்ப்பாசம் மட்டுமே!
நாட்கள் கடந்தாலும் வருடம்
ஒன்றானாலும் என்றும் உங்களை மறவாது
உங்கள் நினைவுகளுடன் எம்
வாழ்க்கையும் கடந்துபோகும்.

(C-4627)

கதிரிப்பாய்,
அச்சுவேலி.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டாவை கைது செய்யுமாறு வலியுறுத்தி

# லண்டனில் தமிழர்கள் கவனயீர்ப்பு

**(லண்டன்)**

**லண்டனில் உள்ள சிங்கப்பூர் தூதரகத்தின் முன் நேற்றுமுன்தினம் அணிதிரண்ட தமிழர்கள், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியும் தமிழினப் படுகொலையாளியுமான கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்து, நீதியின் முன் நிறுத்துமாறு கோஷமிட்டனர்.**




சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழ் கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தொடர் போராட்டங்களை புலம் பெயர் நாடுகளில் முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில், சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழ் இனப் படுகொலையாளியான கோட்டாபயவை கைது செய்து சட்டத்தின் முன் சிங்கப்பூர் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையினை நாம் வலுவாக முன்வைக்கின்றோம் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (நி)

## வெளிநாட்டு தபால் சேவை கட்டணத்தை அதிகரிக்க தீர்மானம்

(கொழும்பு)

வெளிநாட்டு தபால் சேவை கட்டணத்தை அதிகரிக்க இலங்கை தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் கட்டணம் அதிகரிக்கப்படுமென தபால்மா அதிபர் ரஞ்ஜித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அமெரிக்கா, நெதர்லாந்து, இஸ்ரேல் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கான தபால் பொருட்களை ஏற்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக நாட்டிற்கான விமானங்களின் சேவைகள் வரையறுத்தும் இடைநிறுத்தப்பட்டும் உள்ள காரணத்தினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தபால்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## டலஸ் ஜனாதிபதியானால் சஜித் பிரதமர்

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

(கொழும்பு)

டலஸ் அழகப்பெரும ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பிரதமராக நியமிக்கப்படுவார் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அக் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இதனைத் தெரிவித்துள்ளார். (நி)

## சஜித்தை பிரதமராக ஏற்க பொதுஜன பெரமுன தயார்

### பேராசிரியர் பீரிஸ்

(கொழும்பு)

சஜித்பிரேமதாஸவை பிரதமராக ஏற்றுக்கொள்ள ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன தயார் என கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இருகட்சிகளை இணைத்து முக்கிய பிரச்சினைகளிற்கு தீர்வைக் காண வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு என அவர் தெரிவித்துள்ளார்.

அனேகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் டலஸ் அலகப்பெருமவிற்கு ஆதரவளிக்க தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## மா, டீசல், எரிவாயு விலை குறைந்தால் பாணின் விலையை 50 ரூபாவால் குறைக்கலாம்

### வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

டீசல், எரிவாயு, கோதுமை மா ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்படுமானால் பாணின் விலையை 50 ரூபாவினால் குறைக்க முடியும் என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதிகரிக்கப்பட்ட எரிவாயு கொள்கலன் விலை, கோதுமை மா மற்றும் டீசல் ஆகியவற்றின் விலைகளை குறைக்குமாறு தாம் அரசாங்கத்தை கோருகிறோம்.

இதுதவிர, மண்ணெண்ணெயை தொடர்ச்சியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமானால் ஒரு இறாத்தல் பாணின் விலையை 50 ரூபாவாலும் ஏனைய வெதுப்பக உற்பத்தி உணவு பண்டங்களின் விலையை 25 ரூபாவாலும் குறைக்க முடியும் என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். (நி)

## மின் கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட் மாத தொடக்கத்தில் இருந்து மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படும் என பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க அறிவித்துள்ளார்.

அத்துடன், தற்போதுள்ள மின்சாரக் கட்டணம் [illegible] வீதத்தால் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் மின்சார சபை 130 வீத கட்டண உயர்வை கோரியிருந்ததாக் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், குறைந்த மின்சார பாவனையாளர்களுக்கு சலுகை [illegible] வும் அவர் தெரிவித்தார். (நி)

## பொருளாதாரத்தை விரைவாக மீட்க இலங்கைக்கு இந்தியா உதவும்

### இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே

(கொழும்பு)



இலங்கைக்கு விரைவான மற்றும் பயனுள்ள பொருளாதாரத்தை மீட்டெடுக்க இந்தியா உதவும் என கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.


இலங்கையில் இடம் பெறும் மாற்றம் சுமுகமாக இருக்க வேண்டும் என இந்தியா விரும்புகிறது என உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கிட்டத்தட்ட 4 பில்லியன் டொலர் உதவிகளை வழங்கிய இந்தியா, பொருளாதார சவால்களுக்கு மத்தியில் பல முதலீட்டைக் கொண்டு வரும் என்றும் உறுதியளித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயர்லாந்து அணிக்கெதிரான முதல் இருபது-20

## நியூஸிலாந்து வெற்றி




அயர்லாந்து அணிக்கெதிரான முதலாவது இருபது -20 போட்டியில், நியூஸிலாந்து அணி 31 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. பெல்பாஸ்ட் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அயர்லாந்து அணி, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில், 8 விக் கெட்டுகள் இழப்புக்கு 173 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதனைத்தொடர்ந்து 174 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய அயர்லாந்து அணி, 18.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது. இதனால், நியூஸிலாந்து அணி, 31 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக 52 பந்துகளில் ஒரு சிக்ஸர் 7 பவுண்ரிகள் அடங்கலாக 69 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட க்ளேன் பிலிப்ஸ் தெரிவு செய்யப்பட்டார். (4)

# ஒரு நாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறும் பென் ஸ்டோக்ஸ்



தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் போட்டிக்கு பிறகு ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக இங்கிலாந்தின் பென் ஸ்டோக்ஸ் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் டெஸ்ட் போட்டிகளின் தலைவராக பென் ஸ்டோக்ஸ் உள்ளார்.

நேற்று தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியே பென் ஸ்டோக்ஸ் விளையாடிய கடைசி ஒரு நாள் போட்டியாகும். (4)

# கலைமதி சொக்கர் மாஸ்டர் பிறீமியர் லீக் கால்பந்தாட்ட தொடர்

## அரையிறுதிக்குள் யங்கம்பன்ஸ் லயன்ஸ்



வடமராட்சி உதைபந்தாட்ட லீக் ஆதரவுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டு கழகம் நடத்தும் கலைமதி சொக்கர் மாஸ்டர்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்ட தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்தாம் நாள் போட்டி Youngmpans Lions அணிக்கும் Valarmathy Xtreme அணிக்கும் இடையில் நடைபெற்றது.

போட்டியில் யங்கம்பன்ஸ் லயன்ஸ் அணியினர் 3:1 என்ற அடிப்படையில் கோல்களைப் பெற்றுக்கொண்டு வெற்றி பெற்றதனால் சுற்றுப்போட்டியின் அரை இறுதிப் போட்டிக்குள் நுழைவதற்கான தமது வாய்ப்பினை உறுதிப்படுத்தியுள்ளனர். இப் போட்டியின் ஆட்ட நாயகனாக யங்கம்பன்ஸ் லயன்ஸ் அணியின் பின் களவீரர் விமல் தெரிவு செய்யப்பட்டார். (4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2667

### கரணி

கையில் இருக்கும் போதும், அதை காலி செய்யும் போதும் தெரிவதில்லை.



தேவைக்காக பிறரிடம் கை கட்டி நீட்டி வாங்கும் போதுதான் புரியும் பணத்தின் அருமை...!

### சிந்துஜன்



நம்பிக்கை நிறைந்த ஒருவன் யார் முன்பும் எப்பொழும் மண்டியிடுவது இல்லை

### கீதா

குத்திக் கிழிக்கிற முள்ளா இருந்தாலும் சரி குத்திக் காட்டுற மனுஷங்களாக இருந்தாலும் சரி துரத்தி ஓரமா போட்டு விடுங்க இல்லைன்னா மறுபடியும் நம்மள தான் காயப்படுத்தும்



### தர்சன்

டீவியும் ஆன் பண்ணிக்கிட்டு ஹாலுக்கும் கிட்சனுக்கும் நடந்துக்கிட்டே சீரியலையும் மிஸ் பண்ணாம தோசையும் கருகாம எடுக்கிறதுலதான் நம்ம பெண்களோட திறமையே இருக்கு



### மதுரா

இப்பெல்லாம் Bike ல போனாலே... ஒரு மாதிரியா பாக்கிறாங்கள்




### குகன்

நிலவை தூரத்திலிருந்து இரசிப்பதைப் போல சில உறவுகளையும் தூரத்திலிருந்து இரசிக்க கற்றுக் கொள்ள வேண்டும். சில வலிகள் இல்லாமல் இருக்க

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.,திருமலையைச் சேர்ந்த 7 பேர் தமிழகத்தில் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இருந்து இரு குடும்பங்களைச் சேர்ந்த 7 பேர் கடல் வழியாக தமிழகத்திற்குச் சென்று தஞ்சமடைந்துள்ளனர்.

இலங்கையில் இருந்து கூட்டி செல்லப்பட்ட 7 பேரை தனுஷ் கோடிக்கு அருகில் உள்ள ஐந்தாம் மணல் திட்டில் இறக்கி விட்டு படகோட்டிகள் சென்ற நிலையில் தகவல் அறிந்த தமிழக கடலோர பாதுகாப்பு பிரிவினர் அவர்களை மீட்டு, மண்டபம் கடலோர பாதுகாப்பு பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியில் வசித்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் திருகோணமலை ஆனந்தபுரி பகுதியில் வசித்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வருமே தமிழகம் சென்றுள்ளனர். (4-33)


# நடமாடும் மருத்துவ சேவையை நடத்துமாறு கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக பேருந்து சேவைகள் நடைபெறாத கிராமங்களுக்கு நடமாடும் மருத்துவ சேவையினை நடத்துவதற்கு முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என போக்குவரத்து வசதிகள் இல்லாத கிராமங்களின் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் தண்ணிமுறிப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவின் ஆறுமுகத்தான்குளம் கிராமத்திற்கும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் ஒதியமலை, அம்பகாமம் போன்ற பல கிராமங்களுக்கும் மாந்தை கிழக்கின் சிறாட்டிக்குளம் போன்ற பல கிராமங்களுக்கும் துணுக்காயின் ஐயன்கன்குளம், பழைய முறிகண்டி, தேராங்கண்டல், புத்துவெட்டுவான், அமதிபுரம், ஆரோக்கியபுரம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம், தென்னியங்குளம், உயிலங்குளம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவின் பேருந்து சேவைகள் நடைபெறாத கிராமங்களுக்கு குறைந்தது 15 நாட்களுக்கு ஒரு தடவை நடமாடும் மருத்துவ சேவையினை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (4-350)

## யாழில் நட்சத்திர ஆமை மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரியாலை கிழக்கு பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை நட்சத்திர ஆமை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த ஆமை அரிய இனம் என்றும் , அதனை பாதுகாப்பாக வன ஜீவராசிக்ள் திணைக்களத்திடம் ஒப்படைக்கஉள்ளதாகவும் ஊர்வாசிகள் தெரிவித்தனர். (4-104)

## பட்டப்பகலில் சைக்கிள் திருட்டு

(நெளுக்குளம்)

வவுனியாவில் உள்ள ஆரம்ப பாடசாலை ஒன்றின் வளாகத்துக்குள் துவிச்சக்கர வண்டி ஒன்று திருடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்த திருட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர் ஒரு இளைஞன் என CCTV காணொளியின் மூலம் இனங் காணப்பட்டுள்ளது.இது தொடர்பாக வவுனியா பொலிஸில் உரிமையாளர் முறைப்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. (4-299)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 160 | 300 |
| உருளைக்கிழங்கு | 240 | 240 | 240 |
| பச்சைமிளகாய் | 450 | 600 | 600 |
| தக்காளி | 240 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 240 | 200 |
| கோவா | 280 | 300 | 320 |
| கரட் | 350 | 380 | 380 |
| பூசணி | 250 | 200 | 250 |
| புடோல் | 130 | 240 | 240 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 340 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 240 | 240 | 250 |
| பாகற்காய் | 200 | 400 | 400 |
| வெண்டக்காய் | 140 | 120 | 280 |
| கருணைக் கிழங்கு | 180 | 160 | 250 |
| பயற்றங்காய் | 200 | 100 | 280 |
| லீக்ஸ் | 260 | 280 | 300 |
| பீற்றூட் | 300 | 240 | 320 |
| கறிமிளகாய் | 550 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 300 |
| போஞ்சி | 450 | 480 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | — | 280 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 |
| தேசிக்காய் | 300 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 40-50 | 50-70 |
| இராசவள்ளி | 240 | 240 | 250 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 350 |
| முள்ளங்கி | 100 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | 150 | 100 | 150 |

## அன்பு மலர் 'அக்கா'

## ஓராண்டில் உன் நினைவால்...

மலர்வு 21 . 04 . 1932



உதிர்வு 02 . 07 . 2021

அமரர்.

### திருமதி. மகேஸ்வரி சேனாதிராசா

கோவில்குளம், வவுனியா

தூக்கி வளர்த்தவளே
சோறூட்டி விட்டவளே
தாங்கிச் சுமந்தவளே
தாயாகக் காத்தவளே
ஏங்கித் தவிக்க விட்டு
ஏன் பிரிந்தாய் மலரக்கா
ஓராண்டு சென்றாலும்
உன் நினைவு நெஞ்சகலா

ஆண்டு ஒன்று நிகழ்வு;
அதில் எந்தன் பதிவு.


வன்னி மலர்க்காடு,
இந்துபுரம்,
கிளிநொச்சி.

அன்புத் தம்பி
வன்னி, அ.முருகேசு.

(c-4626)

## மரண அறிவித்தல்

மலர்வு 30 . 01 . 1941



உதிர்வு 15 . 07 . 2022

### இராசதுரை கணேசராசா

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை கணேசராசா அவர்கள் 15.07.2022 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற இராசதுரை இராசம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்தையா பாக்கியத்தின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், கலைவாணி (லண்டன்), மதிவாணி, ஈஸ்வரன் (லண்டன்), ஜெயவாணி ஆகியோரின் அன்புத் தந்தையும்,

அமிர்தலிங்கம் (லண்டன்), சூரியகுமார், யாழினி, செல்வக்குமாரன் ஆகியோரின் மாமனாரும், அமுதகீதன் (லண்டன்), வித்தியா (லண்டன்), சந்தனா (லண்டன்), ஆதிரை (கொக்குவில் இந்துக் கல்லூரி), நேத்திரன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), இலக்கியன் (ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை) ஆகியோரின் அன்பு அம்மப்பாவும், காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம், ராணிமலர் மற்றும் மகாதேவிமலர் ஆகியோரின் அன்பு சகோதரனும், நாகேஸ்வரி, காலஞ்சென்ற பொன்மணி, நாகலச்சுமி, தங்கராஜா மற்றும் சிவனேசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 20.07.2022 இன்று காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(12194)

தொடர்புகளுக்கு
மதி - 077 670 1506
ஜெயா - 077 123 4188

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதகுருமார்களுக்கு எரிபொருள் வழங்க
# விசேட ஏற்பாடு செய்யுங்கள்
## கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கிலுள்ள மத குருமார்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கு மாவட்ட அரசாங்க அதிபர்கள் விசேட ஏற்பாடு ஒன்றை ஒழுங்குபடுத்துமாறு அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று அனுப்பிய அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில் மேலும் தெரிவித்ததாவது, மதகுருமார்கள் வரிசையில் காத்திருந்து தமதுவாகனங்களுக்கு எரிபொருள் பெறுவதில் பெரும் சிரமங்களைச் சந்தித்து வருகின்றார்கள். பல ஆலயங்களில் நேரம் தவறாது பூசை ஆற்றி வரும் பூசகர்கள் தெருவில் காத்திருப்பது வருத்தத்திற்குரியது.

எனவே சகல மதகுருமார்களுக்கும் வாரத்திலொரு நாள் மாலை நேரம் எரிபொருள் வழங்க அரச அதிபர்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விசேட உத்தரவு வழங்கி உதவுமாறு நன்றியோடு வேண்டுகின்றோம். மதகுருமார்களை மதித்து நடத்துதல் எமது சமூகக் கடமையாகும் எனத் தெரிவித்தார். (4-18)

## தமிழர் தரப்புக்கு சாதகமாக
# ஆட்சி தலைமையை தீர்மானிப்பதற்கு தமிழ் தலைவர்கள் முன்வர வேண்டும்
## தவத்திரு அகத்தியர் அடிகளார் தெரிவிப்பு



(திருமலை)

இன்றைய இலங்கை தீவின் அரசியல், பொருளாதார நெருக்கடியை தமிழ் மக்கள் சார்பாக சரியான விதத்தில் அணுக தமிழ்த் தேசிய கட்சிகள் முன்வர வேண்டும் என திருகோணமலை தென்கயிலை ஆதீனம் தவத்திரு அகத்தியர் அடிகளார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடி தீவிரம் பெற்று ஜனாதிபதி பதவி துறப்பிக்கச் செய்யப்பட்டு அரசியல் நெருக்கடி தீவின் ஆட்சி தலைமை தீர்மானிப்பதில் ஏற்பட்டுள்ள நிலையில் தமிழ் தரப்புக்கு சாதகமாக எமது அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு பயன்படுத்த அனைத்து தமிழ் தலைவர்களும் முன்வர வேண்டும்.

குறிப்பாக தற்போது தெரிவு செய்யப்படவுள்ள புதிய ஜனாதிபதியை தீர்மானிப்பதில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகள் செல்வாக்கு செலுத்தும் என கருதப்படும் நிலையில் எம்மிடையே உள்ள பேதங்களை மறந்து ஒட்டுமொத்த இனத்தின் நலனை முன்நிறுத்தி தமிழ் தேசிய அடிப்படை கோட்பாடுகளின் நீண்ட கால மனிதநேய கோரிக்கைகளை முன்வைத்து வேட்பாளர்களிற்கு ஆதரவு வழங்குவதை தீர்மானிக்கும் பேச்சுகளில் ஈடுபட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனையின்றி உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். பயங்கரவாதச் சட்டம் நீக்கப்பட வேண்டும்.

நேரடியாக ஒப்படைத்து காணாமல் போனோர் விவகாரத்தில் நீதியான தீர்வும் உரிய உடனடி நீண்ட கால நிவாரணங்களும் வழங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

வடகிழக்கு பொருளாதார நிதியம் புலம் பெயர் முதலீடுகளிற்கு பாதுகாப்பும் தங்கு தடையற்ற ஊக்குவிப்பும்.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் விடுவிப்பும் தொல் பொருள், வன விலங்கு, மகாவலி ஆக்கிரமிப்பு வலய பிரகடனங்களை மீளப்பெறுதல்.

தாயகம், சுயநிர்ணயம், அடிப்படையில் நிரந்த தீர்வும் முன்னதாக இடைக்கால நிர்வாக பரீசீலனை.

ஆகிய விடயங்களுக்கு உடனடி இணக்கப்பாடும் நீண்ட கால தீர்வுகளிற்கு கொள்கை ரீதியான உடன்பாடும் தெரிவிக்கும் பேச்சு வார்த்தையை மேற்கொண்டே ஆதரவுத் தளத்தை தீர்மானிக்க அனைத்து தமிழ் கட்சிகளும் முன்வர வடகிழக்கின் ஆன்மிகத் தலைவர்களில் ஒருவர் என்ற ரீதியில் மக்கள் சார்பாக கேட்டு நிற்கின்றோம் என தெரிவித்தார். (4)

# அனைவருக்கும் எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை
## நுணாவில் ஐ.ஓ.சி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சகலரும் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக சாவகச்சேரி நுணாவில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் வை.சிவராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

நாளை வியாழக்கிழமை தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/301 தொடக்கம் ஜே/307 வரையான கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கும், வெள்ளிக்கிழமை ஜே/308 தொடக்கம் ஜே/314 வரையான கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் ,23 ஆம் திகதி சனிக்கிழமை ஜே/340 தொடக்கம் ஜே/347 வரையான கிராம மக்களுக்கும் நுணாவில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் விநியோகிக்கப்படும்.

ஏற்கனவே ஜே/288 தொடக்கம் ஜே/300 வரையான 12 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு சுமுகமான முறையில் எம்மால் எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளது.ஏனைய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கும் அடுத்த வாரமளவில் பெற்றோல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட எரிபொருள் அட்டைக்கு மாத்திரமே எரிபொருள் வழங்கப்படும் என்பதால் தவறாது எரிபொருள் அட்டையுடன் வருகை தர வேண்டும். அத்துடன் குறித்த அட்டையைப் பயன்படுத்தி ஏற்கனவே எரிபொருள் பெற்றவர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட மாட்டாது என தெரிவித்தார். (4-30)

# நீர் வழங்கல் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மற்றும் கர வெட்டி நீர் வழங்கல் பிரதான குழாயில் எதிர்பாராத வெடிப்பு ஏற்பட்டமையினால் அதற் கான திருத்த வேலைகள் நடை பெறுவதன் காரணமாக இன்று புதன் மற்றும் நாளை வியாழன் ஆகிய இரு தினங்களில் நீர் வழங்கல் சேவை இடை நிறுத்தப்படும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (4)

# வெடிபொருட்கள் மீட்பு

(முறிகண்டி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கனகாம்பிகைக் குளம் பகுதியில் உள்ள தனியார் காணியிலிருந்து வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளது.

காணி உரிமையாளர் துப்புரவு பணியில் ஈடுபட்ட நிலையில் இவை அடையாளம் காணப்பட்டது. இந்த நிலையில் பொலிஸாருக்கு காணி உரிமையாளரால் தகவல் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் விசேட அதிரடிப்படையினரால் இவை நேற்று முற்பகல் மீட்கப்பட்டுள்ளது. (4-100)

# இராசிபலன்

20.07.2022
ஆடி 04, புதன்கிழமை
சப்தமி பிற்பகல் 1.34 மணிவரை

ரேவதி முன்னிரவு 6.51 மணிவரை
சுப நேரம் -4.31-6.01 மணிவரை
இராகு காலம் -12.01-1.31 மணிவரை

சந்திராஷ்டமம்-
மகம், பூரம்

வளவன்


மேஷம்

விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும்,சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள்.


கடகம்

பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், புதிய திட்டங்களில் முன்னேற்றமுண்டு, தந்தை வழி உறவில் உதவியுண்டு.


துலாம்

நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.


மகரம்

உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும் வாய்ப்புண்டு, போட்டியாக செயற்பட்டவர்கள் மனம்மாறுவர்.


ரிஷபம்

குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


சிம்மம்

தொழில் ரீதியாக சில குழப்பங்கள் தோன்றி மறையலாம், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது.


விருச்சிகம்

புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்,காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், விருந்தினர்களின் வருகையுண்டு.


கும்பம்

பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்,செல்வநிலை உயரும் நாள், உங்களின் வார்த்தையை பலரும் கேட்டு நடக்க முன்வரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.


மிதுனம்

மன நிறைவு கூடும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர் கள், காரிய அனுகூலமுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும்.


கன்னி

கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


தனுசு

செயற்பாடுகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வாகன சுகமுண்டு.


மீனம்

வழிபாடு ஆனந்தம் தரும், ஆழ்ந்த சிந்தனையுண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு, ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

எதையும் துன்பம் என்று நினைத்தால் தான் துன்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்களிப்பதை புறக்கணிக்க மாட்டோம்

### சுதந்திரக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பில் சுதந்திரக் கட்சிபங்கேற்கும் என அதன் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, டலஸ் அழகப்பெரும மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருடன் கலந்துரையாடி யாருக்கு ஆதரவு என்பது குறித்து தீர்மானிப்போம் என கூறினார்.

வாக்கெடுப்பை நடத்தாமல் கலந்துரையாடி நியாயமான தீர்மானத்தை எட்ட அவர்கள் முடிவு எடுக்க வேண்டும் என்றும் தயாசிறி ஜயசேகர கேட்டுக்கொண்டார்.

சுதந்திரக் கட்சி ஒருபோதும் வாக்களிப்பை புறக்கணிக்க போவதாகக் கூறவில்லை என அவர் தெரிவித்தார். (நி)

## மீண்டும் அதிகரிக்கும் கொரோனா ஒரு நாளில் மட்டும் 62 பேர் அடையாளம்

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் கொவிட்-19 தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நாளாந்தம் 30 தொடக்கம் 40 நோயாளர்கள் பதிவாகி வருவதாகவும் தொற்று நோய் பிரிவின் தலைவர் மருத்துவர் சமித்த கினிகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாட்டில் 62 பேர் கொவிட்-19 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். (நி)

## பேருந்து கட்டணங்களை குறைக்க தயார்

(கொழும்பு)

பேருந்து கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஒப்பீட்டளவிலான வீதத்தில் பேருந்து கட்டணம் குறைக்கப்படும் என இலங்கை போக்குவரத்து சபையின் பணிப்பாளர் நிலான் மிரண்டா குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளமைக்கு அமைய, பேருந்து கட்டணத் திருத்தங்களை மேற்கொள்ளத் தயார் என பேருந்து சங்கங்கள் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தன. (நி)

## சஜித்தின் தியாகத்தை பாராட்டினார் டலஸ்



(கொழும்பு)

ஜனாதிபதி போட்டியிலிருந்து சஜித் பிரேமதாஸ வெளியேறி, மாபெரும் தியாகத்தை செய்துள்ளார் என ஜனாதிபதி வேட்பாளர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விசேட காணொளி வாயிலாக கருத்து வெளியிட்டுள்ள அவர், இன்று இந்த நாட்டுக்கு ஐக்கியமான ஒரு அரசியல் கலாசாரம் தேவைப்படுகிறது.

மக்களும் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும் என்றே விரும்புகிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மக்களின் குரல் புரியாமல் இருந்தது.

நேற்று முன்தினம் வரை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவதாகவே தீர்மானித்திருந்தார்.

நேற்று அவர் மாபெரும் தியாகத்தை செய்துள்ளார். ஒரு கட்சியினாலோ ஒரு தலைவரினாலோ இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் காண முடியாது.

மக்களை பிரச்சினைகளில் இருந்து வெளியே கொண்டுவர நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். என டலஸ் தெரிவித்தார். (நி)


## கேள்வி அறிவித்தல்
## சபை நிதி வேலைத்திட்டம்- 2022
## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.

1. பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின். சபை நிதி குறித்த வேலைத்திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் road அமைப்புக்கான சீடா (CIDA) பதிவினை மேற்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule 5) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. குறித்த பெறுகை 03/ 2020 ,03/2020 (i) இலக்கங்களை உடைய 09.10.2020, 11.01.2021 ஆம் திகதிகளின் பொதுநிதி சுற்று நிருபங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை (தொலைபேசி 021-205 0037 , தொலைநகல் 021-205 0036 ,E-Mail: pallaips@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் 14.00 மணி வரை 20.07.2022 ஆம் திகதியிலிருந்து 02.08.2022 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை எனும் இடத்திலிருந்து 20.07.2022.ஆம் திகதியிலிருந்து 02.08.2022 ஆம் திகதிவரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2.000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை எனும் முகவரிக்கு 02.08.2022 ஆம் திகதி மாலை 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விகள் செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/03/cf/tend/03/2022 | Reconstruction of Mullippattu sub office roads 01 | 1.752 Mn | 60 நாட்கள் | C9 and above (Road) | 49 days from bid open (20.09.2022) | 18,000.00 | 18.10.2022 |
| NP/14/45(3)/PL/03/cf/tend/01/2022 | Reconstruction of Mukamalai sub office roads | 1.663 Mn | 60 நாட்கள் | C9 and above (Road) | 49 days from bid open (20.09.2022) | 17,000.00 | 18.10.2022 |
| NP/14/45(3)/PL/03/cf/tend/04/2022 | Reconstruction of Mullippattu sub office roads 02 | 2.638 Mn | 60 நாட்கள் | C8 and above (Road) | 63 days from bid open (03.10.2022) | 27,000.00 | 31.10.2022 |
| NP/14/45(3)/PL/03/cf/tend/02/2022 | Reconstruction of Puloppalai sub office roads | 3.095 Mn | 60 நாட்கள் | C8 and above (Road) | 63 days from bid open (03.10.2022) | 31,000.00 | 31.10.2022 |

11. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 26.07.2022 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**சுப்பிரமணியம் சுரேன்**

**தவிசாளர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,**
**பளை.**

(நி-4628) 20.07.2022


## ராஜபக்ஷக்களின் கைக்கூலியான ரணிலை விரட்டியடிப்போம்

### ஹற்றனில் போராட்டம்



(ஹற்றன்)

"ராஜபக்ஷக்களின் கைக் கூலியான ரணிலை விரட்டி யடிப்போம்"என்ற தொனிப் பொருளில் ஹற்றனில் தொழி ற்சங்கங்கள் மற்றும் வெகுசன அமைப்புகளின் கூட்டமைப் பின் ஏற்பாட்டில் போராட்ட மொன்று நேற்று முன்னெடுக்கப் பட்டது.

இந்த போராட்டத்தில் சிவில் அமைப்புகளின் பிரதிநிதி திகள், சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் என பெருமளவானோர் பங்கேற்றனர். பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும், மீண்டும் ஜனாதிபதியாக வர கூடாது என போராட்டக்காரர்கள் வலியுறுத்தியதுடன், அவ்வாறு இல்லாவிட்டால் போராட்டம் தொடரும் எனவும் சூளுரைத்தனர். (நி)

## டலஸிக்கே ஆதரவு

### சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்கள்

(கொழும்பு)

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளிட்ட சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் குழு, பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவாக வாக்களிக்க தீர்மானித்துள்ளது. (நி)

## கடந்த 18 நாட்களில் மட்டும் 25,547 சுற்றுலாப் பயணிகள்

(கொழும்பு)

இந்த மாதத்தின் கடந்த 18 நாட்களில் மாத்திரம் 25 ஆயிரத்து 547 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இது கடந்த ஜூன் மற்றும் மே மாதத்தை விட சற்று அதிகமாகும் என சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 4 இலட்சத்து 36 ஆயிரத்து 921 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். (நி)


**வீடு வாடகைக்கு தேவை**

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் ஒன்று வசிக்கக் கூடிய சகல வதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.

**077 745 1625**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

அம்புலிமாமா

## பெயர் பரவியது



விதர்ப்ப நாட்டு மன்னன் விமலாதித் தன் கொடுங்கோல் மன்னன். அவனது ஆட்சி யில் மக்கள் கஷ்டங்களைத் தான் அனுபவித்தனர். விமலாதித்தன் இறக்கு முன் தன் கொடுஞ் செயல்களுக்காக மனம் வருந்தினான்.

இறப்பதற்கு முன் அவன் தன் மகன் கம லாதித் தனை அழைத்து "மகனே! நான் இறந்த பின் மக்கள் என்னை இகழா மல் புகழும்படி செய்ய வேண்டியது உன் கடமை. அப்போதுதான் என் ஆத்மா சாந்தி அடையும்" என்று கூறி உயிர் விட்டான். கமலாதித் தன் நல்ல குணங்கள் கொண்டவன். தலை நகரில் தன் தந்தையின் பெயரில் இலவச சாப்பாட்டுக் கூடத்தையும் ஒரு பள்ளிக் கூடத்தையும் நிறுவினான். சில நாட்களுக்குப் பின் கமலாதித்தன் மாறு வேடத்தில் சாப்பாட்டுக் கூடத்திற்குச் சென்றான்.

அங்கு நூற்றுக்கணக்கானவர்களுக்கு சாப்பாடு போடப்பட்டும் அவர்களின் முகங்க ளில் திருப்தி அடைந்த அறிகுறியை அவன் காணவில்லை.

ஒருவனிடம் விசாரித்த போது அவன் "இவ்வளவு நல்ல காரி யம் செய்யப்படும் இடத்திற்கு ஏனோ அந்தக் கொடுங்கோல் மன்னனின் பெயரை வைத்திருக்கிறார்களே. அதுதான் மகிழ்ச்சி அளிக்கவில்லை" என்றான்.

இதைக் கேட்ட கமலாதித்தன் மனம் கலங்கியவாறே பள்ளிக் கூடத்தைக் காணச் சென்றான். அங்கு ஆசிரியர்கள் மட்டுமே இருந்தார்கள். ஒரு மாணவன் கூடத் தென்படவில்லை. அதுகண்டு அவன் ஆச்சரியப்பட்டு ஒரு ஆசிரியரிடம் அது பற்றிக் கேட்டான். அதற்கு அவர் "ஐயா! கொடுங்கோல் மன்னனின் பெயரிலுள்ள இந்தப் பள்ளியில் தங்கள் குழந்தைகள் படித்தால் அவனைப் போலக் கெட்டவர்களாகி விடுவார்கள் என்று பெற்றோர்கள் பயந்து இங்கு அவர்களை அனுப்பாமல் வேறு பள்ளிகளில் சேர்க்கிறார்கள்" என்றார். அதைக் கேட்டு கமலாதித்தன் மனம் உடைந்துபோய் அன்றே உணவுக் கூடத்தையும் பள்ளிக் கூடத்தையும் மூடி விட்டான். கொஞ்ச காலத்திற்குப் பின் கம லாதித்தன் ஒரு கனவு கண்டான். அதில் விம லாதித்தன் கண்ணீர் வடித்தவாறே தோன்றியதைக் கண்டான்.

அக்கனவை கமலாதித் தன் தன் அமைச்சரிடம் கூறவே அவரும் "உங்கள் தந்தை தான் இறக்கும் போது கூறியதை நீங்கள் நிறைவேற்ற வேண்டுகிறார் என்பதே அதன்பொருள்" என்றார். அன்று முதல் கமலாதித் தன் மக்களுக்குப் பயன்தரும் பல வேலைகளைச் செய்தான். வரிகளைக் குறைத்தான், பாதைகள் போட்டான், எல்லா ஊர்களிலும் இலவசக் கூடங்களை அமைத்தான். இதனால் கமலாதித் தன் புகழ் பரவியது. இந் நிலையில் அமைச்சர் கூறிய படி விமலாதித்தனின் சிலைகள் செய்து தலை நகரிலும் மற்ற ஊர்களிலும் நிறுவினான்.

அதுபற்றி மக்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என அறிய கமலாதித்தனும் அமைச்சரும் மாறு வேடத்தில் சென்றார்கள். ஒரு ஊரில் அவர்கள் ஒரு அயல்நாட்டவன் அவ் வூர்காரனிடம் "இது யார் சிலை?" என்று விசாரிப்பதைக் கேட்டார்கள். அவனும் "இதுவா? இது கடவுள் போல இருக்கும் எங்கள் மன்னரின் தந்தையின் உருவச்சிலை. அவர் இறந்ததால் தான் எங்களுக்கு இவ்வளவு நல்ல மன்னர் கிடைத்திருக்கிறார்" என்றான்.

இது கேட்டு கமலாதித்தன் தந்தை யின் பெயர் அவரது கடைசி நேர விருப்பப்படி பரவுகிறது என மகிழ்ந்து அமைச்சரோடு தலை நகர் திரும்பினான்.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## கோவலன் என் காவலன்




அதனால் தான் அரசர் வீட்டுத் திருமணம் போல எல்லா நாடுகளிலுமிருந்தும் மக்கள் வந்திருந்தார்கள்.

மாசாத்துவான் மகன் கோவலன். பதினாறு வயது இளங்காளை. தமிழ்க் கடவுள் முருகன் போல் அழகன்.

விரிந்த மார்பும் அகன்ற தோள்களுமாக உடற் கட்டு.

அவன் சிரிப்பிலேயே தனலட்சுமி பளிச்சிட்டாள்.

புகார் நகரின் மற்றொரு பெரிய செல்வந்தர் மாநாய்கன்.

செல்வத்திலும் தர்மத்திலும் மாசாத்துவானுக்கு கொஞ்சமும் இளைத்தவர் அல்ல.

அவர் மகள் கண்ணகி.

கண்ணகி தன் பெயருக்கு ஏற்றாற் போல கண்களால் சிரிப்பவள். அழகும், வடிவும் பொருந்தியவள். பருவம் மலர்ந்து மணக்கும் பன்னிரெண்டாம் வயது. சற்று முன்னர் பூத்த ரோஜாவைப் போல இருந்தாள்.

பெண்கள் பருவம் எய்துவதற்கு முன்னரே திருமணம் முடிக்கும் காலம் அது.

இருப்பினும் மாநாய்கன் தன் மகள் பருவம் எய்திய பின்னரே திருமணம் பேசி முடித்தார்.

சந்தோசமான நிகழ்வுதான். ஆனால் திருமணம் முடிந்த கையோடு அவர் தன் மகளைக் கணவர் வீட்டுக்கு அனுப்ப வேண்டியிருக்கும்.

அந்தக் கவலை அப்போதே மாநாய்கனின் மனைவி முகத்தில் தெரிந்தது. மாசாத்துவன், மாநாய்கன் இருவரின் குடும்பங்களும் பொருத்தமானவை. மணமக்களும் பொருத்தமானவர்கள்.

அப்புறமென்ன தடை? திருமணம் நிச்சயமாயிற்று.

உறவினர்களும், நண்பர்களும் மட்டுமே வரும் சாதாரணத் திருமணமா? ஊரே திரண்டு வர வேண்டும். சேர நாட்டிலிருந்தும், பாண்டிய நாட்டிலிருந்தும் விருந்தினர்கள் வர வேண்டும். மன்னர்களும் மந்திரிகளும் வரவேண்டும். யானைகள் மீதேறிச் சென்ற மங்கலப் பெண்கள் திருமணச் செய்தியை புகார் நகர் முழுவதும் அறிவித்தார்கள்.

சேர, பாண்டிய நாடுகளுக்கும் செய்தி பரவியது. அழைப்புகள் பறந்தன. திருமண நாள் வந்தது.

சங்கும், முரசும் மத்தளமும் முழங்கியது. வெண்குடைகள் சூழ்ந்து வந்தன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல காரியங்களைச் செய்ய ஒருபோதும் பயப்படாதீர்கள்! தாமதமின்றி உடனே நல்ல காரியங்களைச் செய்யுங்கள்.
– நெப்போலியன் ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# ரணிலை வீழ்த்தக்கூடிய சஜித்தின் காய்நகர்த்தல்

ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான நாள் இன்று.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமாச் செய்ததன் காரணமாக புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்தாக வேண்டும்.

அதிலும் பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னதாக ஜனாதிபதி பதவி விலகுவாராயின், எஞ்சியிருக்கக்கூடிய பதவிக்காலத்துக்கான ஜனாதிபதியை பாராளுமன்றம் தெரிவு செய்ய வேண்டும்.

அந்த வகையில் இன்று (20) நடைபெறுகின்ற ஜனாதிபதித் தெரிவில் மூன்று பேர் களமிறங்கியுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க, டலஸ் அழகப்பெரும, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரே அந்த மூவருமாவர்.

இதில் ஜனாதிபதிப் பதவிக்காகப் போட்டியிடவிருந்த சஜித் பிரேமதாஸ அதிலிருந்து விலகிக் கொண்டமை அரசியல் களத்தில் அதிர்ச்சி தருவதாக இருந்தபோதிலும் அதைவிட அதிர்ச்சிக்குரிய விடயம் அவரும் அவர் கட்சியும் டலஸ் அழகப்பெருமவை ஆதரிப்பதாகும்.

இங்கு சஜித் பிரேமதாஸ வீஷ்மர் போல நாடாளும் அதிகாரம் வேண்டாம் என்று அதனைத் துறந்தாரா? என்றால் இல்லை.

மாறாக ஜனாதிபதித் தெரிவில் ரணில் விக்கிரமசிங்கவும் டலஸ் அழகப்பெருமவும் போட்டியிடும்போது, அதில் தானும் களமிறங்கினால் தனக்கான வெற்றி என்பது மூன்றாம் இடத்துக்கு நகர்த்தப்படும்.

தவிர, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வரக்கூடிய வாய்ப்பையும் அது ஏற்படுத்திவிடும்.

எனவே தானும் தோற்று ரணிலையும் வெல்ல வைப்பதான சூழ்நிலை இருக்கும் போது,

போட்டியில் இருந்து விலகுவது என்று சஜித் பிரேமதாஸ எடுத்த முடிவு அவரைப் பொறுத்தவரை இராஜதந்திர நகர்வாகவே பார்க்கப்படும்.

அதேநேரம் ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடுவதை விடுத்து டலஸ் அழகப்பெருமவை ஆதரித்து அவரை வெற்றி பெறச் செய்வதனூடாக பிரதமராகக்கூடிய ஓர் அரிய சந்தர்ப்பம் தனக்குக் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பிலும் சஜித் பிரேமதாஸவின் நடவடிக்கை அமைகிறது.

இவையொருபுறமிருக்க, ரணில் விக்கிரமசிங்க எந்தவகையிலும் ஜனாதிபதியாக வந்துவிடக்கூடாது என்பதில் போராட்டக்காரர்கள் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஆக, பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை பலத்தின் அடிப்படையில் யார் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் என்பது இன்று முடிவாகிவிடும்.

அந்த முடிவில்தான் இலங்கையின் அமைதியும் அமைதியின்மையும் தங்கியுள்ளது.

# தமிழர் அபிலாசைகளை கருத்திற் கொண்டு தமிழ்க் கட்சிகள் செயற்பட வேண்டும்

## யாழ். பல்கலை கலைப்பீட மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தெரிவின் போது பொருளாதாரத்தை உயர்த்துவதற்கும் தமிழ் மக்களின் அபிலாசைகளைக் கருத்திற் கொண்டு தமிழ்க் கட்சிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் செயற்பட வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.ஜெல்சின் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட- கிழக்குத் தமிழ்த் தரப்புக்களுக்கு இது ஒரு முக்கியமான தருணம். இன்றைய காலகட்டத்தில் பொருளாதாரத்தை உயர்த்துவதற் கும் தமிழ்மக்களின் அபிலாசைகளைக் கருத்திற் கொண்டும் தமிழ்க்கட்சிகள் செயற்பட வேண்டும்.

நீங்கள் ஆதரிக்கும் வேட்பாளர் எமது தமிழ் மக்களின் கோரிக்கைகளையும் அபிலாஷைகளையும் ஏற்கும் தருணத்தில் நடுநிலையாகச் செயற்படாமல் அந்த வேட்பாளருக்கு முழு ஆதரவை நீங்கள் வழங்க வேண்டுமென மாணவர் சமூகமாக நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம். தமிழ் மக்களால் தேர்வு செய்யப்பட்ட நீங்கள் தமிழ் மக்களின் உண்மையான தேவைகளைப் புரிந்து இருப்பீர்கள் என நம்புகிறோம். காலம் காலமாக தமிழ் மக்கள் உங்களுடைய வாக்கு றுதிகளை நம்பி ஏமாற்றம் அடைந்து இருக்கின்ற வேளையில் இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவும் செயலாற்ற வேண்டும் எனத் தெரிவித்தார். (4-18-33)

# பஸ்களுக்கு எரிபொருள் வழங்க புதிய நடைமுறை அறிமுகம்

(கொழும்பு)

வீதி அனுமதிப்பத்திரம் உள்ள பஸ்களுக்கு, அருகில் உள்ள டிப்போக்கள் மற்றும் அடையாளம் காணப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து எரிபொருள் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகள் அமைச்சில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 21ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** சங்குவேலி பிள்ளையார் கோவிலடி, சீன ரயில்வே அச்செழு, விக்கிரமராச்சி பிறைவெற் லிமிட்டெட் புன்னாலைக்கட்டுவன், டெலிகொம் சுன்னாகம், அச்செழு நீர்வேலி குறுக்கு வீதி, ஏழாலை, ஈவினை, கட்டுவன், கட்டுவன்புலம், கற்பகம் ஊரெழு, குப்பிழான், குரும்பசிட்டி, மாசிவன் அச்செழு, மயிலங்காடு, என்.கே திருமண மண்டபம் ஊரெழு பிள்ளையார், புன்னாலைக்கட்டுவன், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சூறாவத்தை சுன்னாகம், புகையிரத நிலைய வீதி மணியம் கடையடி தோப்பு ஏழாலை வாகையடி, சுன்னாகம் மின் நிலைய பிரதேசம், பொக்கணை, ஊரெழு அம்மன் கோவிலடி, ஆர்க் லேன் உடுவில், டச்சு வீதி சங்குவேலி, சங்குவேலி, சங்குவேலி பிள்ளையார் கோவிலடி, உடுவில் மகளிர் கல்லூரி, சீனோர் - படகு துறை காரைநகர், கடற்படை தளம் காரைநகர், காரைநகர் கடற்படை முகாம், இ.போ.ச டிப்போ காரைநகர், களபூமி பாலக்காடு அம்மன் கோவிலடி காரைநகர், தோப்புக்காடு காரைநகர், ஊரி காரைநகர் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** கனகராயங்குளம் சந்தி, கனகராயங்குளம் ஆலங்குளம் (புதுவிளான்), கறுப்புக்குத்தி இராணுவ முகாம், குறிசுட்டான்குளம், பரசன்குளம், புதூர் கோவிலடி,புத்தூர் கோபுரம், புதுக்குளம், புதுக் கிராமம், Puthuvilankulam sivankovil, விக்னகுளம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** உயிர்த்தரசங்குளம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல் மன் ஐஸ் தொழிற்சாலை, பெரிய கரைசல் பல்மெய்ரா ஹவுஸ்-தலைமன்னார், தலைமன்னார் மருத்துவமனை, தலைமன்னார் கடற்படை முகாம், வங்காலைப்பாடு சென்ட் லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை பேசாலை ஐஸ் தொழிற்சாலை, கட்டுகாரங்குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங்குடியிருப்பு, குருசுப் பாடு கடற்படை முகாம், படப்பாடி நீர் வழங்கல், பருத்திப்பண்ணை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரியகரைசல், பேசாலை, சிலாவத்தை முகாம் சந்தி, சிறுதோப்பு, தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்பு திட்டம், தலை மன்னார் புகையிரத நிலையம், துள்ளுகுடியிருப்பு தும்புத் தொழிற்சாலை, துள்ளுகுடியிருப்பு திட்டம், வங்காலைப்பாடு ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** பூந்தோட்டம் PSC இடத்திலும் மின்சாரம் தடைப்படும்.

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



## வித்தியாசாகரைச் சந்தித்தல்

குருதேவர் பரவச நிலையில் வெஞ்சின் மீது அமர்ந்தார். படிப்பிற்காக பண உதவி கேட்டு வித்யாசாகரிடம் வந்திருந்த பதினாறு பதினேழு வயதுள்ள இளைஞன் ஒருவனும் அந்த வெஞ்சின் ஒரு பக்கத்தில் அமர்ந்திருந்தான். குருதேவர் ஒரு ரிஷியின் அகநோக்குடையவர், அந்த இளைஞனின் மனப்போக்கை புரிந்து கொண்டார். அவனிடமிருந்து சற்று அகன்று உட்கார்ந்த அவர் பரவச நிலையிலேயே, 'அம்மா! இந்தப் பையன் மிகுந்த உலகப் பற்று உடையவனாக இருக்கிறான். இவன் உன் அவித்யை உலகைச் சேர்ந்தவன்,அவித்யையின் வாரிசு இவன்' என்றான்.

வித்யாசாகர் சற்று படபடப்புடன் ஒருவரிடம் தண்ணீர் கொண்டு வருமாறு கூறினார். பிறகு ம-விடம், 'ஏதாவது கொண்டு வந்தால் இவர் உண்பாரா?' என்று கேட்டார். 'உண்பார், கொண்டு வாருங்கள்' என்றார் ம-. உடனே வித்யாசகரே ஆர்வத்தோடு உள்ளே சென்று சிறிது இனிப்புக்களைக் கொண்டு வந்து வைத்துவிட்டு 'இவை பர்துவானிலிருந்து வந்தவை' என்றார். குருதேவர் உண்பதற்காகச் சிறிது கொடுக்கப்பட்டது. பவநாத்துக்கும் ஹாஸ்ராவுக்கும் சிறிது கிடைத்தது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2022 - 16.08.2022

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## வெற்றி வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரும்!



**மற்றவர்களுக்கு உதவ வேண்டுமென்று நினைக்கும் சிம்ம இராசி வாசகர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் விரயஸ்தானத்தில் இருப்பதால் விரயங்கள் கொஞ்சம் அதிகரிக்கலாம். குரு பார்வை தன ஸ்தானத்தில் பதிவதால் பொருளாதார வளர்ச்சியும் உண்டு.

**சிம்ம - புதன் சஞ்சாரம்**

ஆடி 13 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பது மிகமிக யோகமாகும். தொட்டது துலங்கும். தொழில் வளம் சிறக்கும். வெற்றி வாய்ப்பு வீடு தேடி வரும். கூட்டாளிகள் உங்கள் குறைகளைத் தீர்க்க முன்வருவர். பணப் புழக்கம் அதிகரிக்கும். அனுபவஸ்தர்களின் ஆலோசனையால் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்வீர்கள்.

**கடக - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆடி 22 ஆம் திகதி கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் உங்கள் இராசிக்கு 12 ஆம் இடமான விரய ஸ்தானத்திற்கு வரும் பொழுது, சகோதரர்களால் விரயம் ஏற்படலாம். தொழிலில் ஒரு சில பங்குதாரர்கள் விலகினாலும் அதை ஏற்று நடத்தும் வல்லமை உங்களுக்கு வரும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறலாம்.

**குருவின் வக்கிர இயக்கம்**

ஆடி 23 ஆம் திகதி, மீன இராசியில் குரு வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அஷ்டமாதிபதி குரு வக்கிரம் பெறுவது நன்மை தான். என்றாலும், பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதியாகவும் புத்திர ஸ்தானாதிபதியாகவும் குரு விளங்குவதால் சில பிரச்சினைகளையும் சந்திக்க நேரிடும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முன்வருவீர்கள். அஷ்டமாதிபதியான குரு வக்கிரம் பெறுவதால் இழந்த பதவிகள் மீண்டும் கிடைக்கும். எதிர்கால முன்னேற்றம் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். வாகன மாற்றங்கள், இடமாற்றங்கள் பற்றிய சிந்தனை மேலோங்கும். நண்பர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர். இல்லத்தில் சுபகாரியம் நடைபெற வழிபிறக்கும்.




**ரிஷப - செவ்வாய் சஞ்சாரம்**

ஆடி 25 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகமான செவ்வாய், 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். அவர் 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, தொழில் வளம் சிறக்கும். நினைத்த காரியத்தை நினைத்தபடியே செய்து முடிப்பீர்கள். சொத்துக்களால் ஆதாயம் உண்டு. உடன்பிறந்தவர்களும் உடன் இருப்பவர்களும் உறுதுணையாக இருப்பர், வருமானமும் வளர்ச்சியும் திருப்தி தரும். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் தட்சிணாமூர்த்தியை வழிபடுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் குடும்பச் சுமை கூடும். கொடுக்கல் - வாங்கல்களில் திருப்தி ஏற்படாது. கணவன் - மனைவிக்குள் சிறுசிறு பிரச்சினை ஏற்பட்டு அகலும். அஷ்டமத்து குருவால் எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. எதிர்பார்த்த இடமாற்றம் கைநழுவிச் செல்லும். பணப்பொறுப்புகளால் பிரச்சினையை சந்திப்பீர்கள். பணிபுரிபவர்களுக்கு உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. சகப் பணியாளர்களிடம் ஒத்துப் போவது நல்லது.

## வெளிநாட்டு முயற்சியில் இருந்த தடைகள் அகலும்!



**நல்ல யோசனைகளை அள்ளி வழங்கும் கன்னி இராசி வாசகர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதோடு குரு பார்வையும் உங்கள் இராசியில் பதிவதால் நினைத்த காரியம் நிறைவேறும்.


**சிம்ம - புதன் சஞ்சாரம்**

ஆடி 13 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிநாதன் விரயஸ்தானத்திற்கு வரும் இந்த நேரம், விரயங்கள் அதிகரிக்கலாம். சுபச் செலவுகளைச் செய்தால், வீண் விரயங்களில் இருந்து விடுபடலாம். வீடுமாற்றம், இடமாற்றம் ஏற்படும். வெளிநாட்டு முயற்சியில் இதுவரை இருந்த தடை அகலும். தொழில் முன்னேற்றத்திற்காகப் புதியவர்களை பங்குதாரர்களாக சேர்த்துக் கொள்வீர்கள்.

**கடக - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆடி 22 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் லாப ஸ்தானத்திற்கு வரும்போது பொருளாதாரம் மேம்படும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். திட்டமிட்ட காரியத்தை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை கூடும். பணியில் இருப்பவர்கள், சுய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர். ஆபரண சேர்க்கை உண்டு. குருவின் வக்கிர இயக்கம் ஆடி 23 ஆம் திகதி, மீன இராசியில் குரு வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற குரு வக்கிரம் பெறுவது யோகம் தான். 4 இற்கு அதிபதி வக்கிரம் பெறுவதால் சுகஸ்தானம் பலமிழக்கிறது. எனவே ஆரோக்கியம் பாதிக்கும். இடம், பூமி வாங்கும் முயற்சியில் சிறு தடைகள் ஏற்பட்டு அகலும். தாயின் உடல் நலத்தில் கவனம் தேவை. தன்னிச்சையாகச் செயற்படுபவர்கள் சில ,தடுமாற்றங்களை சந்திப்பர்.

7 இற்கு அதிபதியான குரு வக்கிரம் பெறுவதால் வாழ்க்கைத் துணை வழியே சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பாசம் மிக்கவர்கள் பகையாக மாறலாம். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துச் செல்வது நல்லது.




**ரிஷப - செவ்வாய் சஞ்சாரம்**

ஆடி 25 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, பாக்கிய ஸ்தானம் பலப்படுகிறது. எனவே பூர்வீகச் சொத்துத் தகராறுகள் அகலும். பஞ்சாயத்துக்கள் உங்களுக்கு சாத்கமாக அமையும். இடம், பூமி வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். என்றைக்கோ குறைந்த விலைக்கு வாங்கிப் போட்ட இடம் இப்பொழுது அதிக விலைக்கு விற்று மகிழ்ச்சியைத் தரும். உடன்பிறப்புகளின் இல்லங்களில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் வராஹி அம்மனை வழிபடுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதத் தொடக்கத்தில் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். சிம்ம புதனின் சஞ்சாரத்திற்குப் பிறகு செலவு கூடும். கணவன் - மனைவி ஒற்றுமை பலப்படும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்க அல்லது தொழில் தொடங்குவீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். சம்பள உயர்வுடன் கூடிய வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு அதுவும் கைகூடும். பிள்-ளைகளின் முன்னேற்றம் திருப்தி தரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாக்குச் சீட்டை...

வாக்குச் சீட்டுகளை பாராளுமன்ற உறுப்பினர்கள் படம் பிடிக்கக்கூடாது என சபாநாயகர் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றபோதே சபாநாயகர் மேற்கண்டவாறு அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதிவாக்கெடுப்பின்போது வாக்குச் சீட்டை படம் பிடிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, பாராளுமன்றத்துக்கு வருவதற்கு ஏழு வருடங்கள் தடை அல்லது ஆறு மாத சிறைத் தண்டனை விதிக்கப்படுவதற்கான சட்டங்கள்காணப்படுவதாகவும்பாராளுமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## விடுமுறை...

அதற்கமைய, எதிர்வரும் ஜூலை 25ஆம் திகதி திங்கட்கிழமை குறித்த பாடசாலைகள் மீள திறக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னதாக எதிர்வரும் 21 ஆம் திகதி பாடசாலைகளை மீள திறக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், எரிபொருள் மற்றும் போக்குவரத்து நெருக்கடிகளைக் கருத்திற்கொண்டு கல்வியமைச்சின் தீர்மானத்துக்கமைய விடுமுறை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2022 ஆம் ஆண்டின் முதலாம் தவணை, செப்டெம்பர் 7 ஆம் திகதி வரையில் நீடிக்கப்படவுள்ளதுடன் இரண்டாம் மற்றும் 3 ஆம் தவணையை நடத்துவதற்கான கால எல்லை தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

முதலாம் தரம் தொடக்கம் 11 ஆம் தரம் வரையில், திருத்தப்பட்ட பாடத்திட்டத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் ஜூலை 25 ஆம் திகதி முதல் அது தொடர்பான கற்றல் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன், முதலாம் தவணை பரீட்சை நடத்தப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், திங்கட்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை வாராந்தம் திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய 3 தினங்களில் மாத்திரம் பாடசாலைகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை நடத்தப்படாத புதன் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் இணைய வழியில் கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ம-7)

## இலங்கைக்கு...

தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோக பூர்வ டுவிட்டர் பக்கபதிவொன்றின் மூலம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவின் அடிப்படையிலேயே இவ்வாறு அமெரிக்கா உதவ முன்வந்துள்ளதாகவும் ஜூலி சங் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஆர்ப்பாட்டங்களை...

கோரிக்கைக்கு அமைய நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (ம-7)

## நாடளாவிய ரீதியி...

அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் வாகன இலக்கத்தகட்டின் இறுதி இலக்கத்துக்கமைய எரிபொருள் விநியோகிக்கும் நாட்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, நாடு முழுவதும் எதிர்வரும் 21 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், இலக்கத்தகட்டின் கடைசி இலக்கத்துக்கமைய எரிபொருள் வழங்கப்படும் நாட்களில் இவ்வாறு மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய 0,1,2 ஆகிய இலக்கங்களுக்கு செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளிலும் 3,4,5 ஆகிய இலக்கங்களுக்கு வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் 6,7,8,9 ஆகிய இலக்கங்களுக்கு திங்கள், புதன் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களிலும் எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 21 முதல் 24 வரையான திகதிகளில் கொழும்பின் பல இடங்களில் QR குறியீட்டு முறைமை பரிசோதிக்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

QR குறியீட்டு முறைமைக்காக நேற்று மாலை 4 மணிவரையில் 20 இலட்சம் பேர் பதிவுசெய்துள்ளதுடன் மேலும் பதிவுகள் தொடர்கின்றன.

இந்த QR குறியீட்டு முறைமையானது

எதிர்வரும் 25ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் அமுலாக்கப்படும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## நாட்டின் அடுத்த...

இன்று பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தெரிவுக்காக, வேட்பாளர்கள் மூவரின் பெயர்கள் நேற்று பாராளுமன்றத்தில் முன்மொழியப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவின் பெயரை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்மொழிய, அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அதனை வழிமொழிந்தார்.

அதேபோல் ரணில் விக்கிரமசிங்கவின் பெயர் அமைச்சர் தினேஸ் குணவர்தனவால் முன்மொழியப்பட்டதுடன் அதனை அமைச்சர் மனுஷ நாணயக்கார வழிமொழிந்தார்.

மேலும் மற்றுமொரு வேட்பாளரான பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்கவின் பெயரை விஜித ஹேரத் எம்.பி முன்மொழிந்ததுடன் அதனை ஹரினி அமரசூரிய வழிமொழிந்தார்.

இதையடுத்து, இன்று காலை 10 மணி வரை பாராளுமன்ற அமர்வுகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. இன்று காலை வாக்கெடுப்பு நடத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்படும். (ம-7)

## அரசி...

அனைவரும் இன்று வீதிகளில் இறங்கி போராடி வருகிறார்கள். அரசியல் கலாசாரத்தை மாற்ற வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாக இருக்கிறது.

நாம் அனைவரும் இலங்கையர் என்ற ரீதியில் ஒன்றிணைய வேண்டும்.

சவால்களுக்கு ஒன்றிணைந்து முகம் கொடுக்க வேண்டும்.

மக்கள் இன்று அரசமைப்பு மாற்றமொன்றை எதிர்பார்க்கிறார்கள். 19 ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும் என நினைக்கிறார்கள்.

இதனை நிறைவேற்ற வேண்டும். பெரும்பான்மையான மக்கள் இன்று எம்முடன் இருக்கிறார்கள்.

இந்தப் பலத்துடன் நாம் நாட்டையும் கட்டியெழுப்ப வேண்டும். எமது பயணம் கடினமானதாக இருந்தாலும் இதனை செய்து முடிக்க வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது என்றார். (ம-7)

## நாட்...

ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எதிர்க்கட்சிக்கும் ஆளும் தரப்பிற்கும் இடையில் கருத்தொற்றுமையுடன், கொள்கை ரீதியிலான இணக்கப்பாடு தற்போது எட்டப்பட்டுள்ளது. நாட்டு மக்களின் கோரிக்கை என்ன என்பதை பாராளுமன்றில் உள்ள பெரும்பாலானோர் விளங்கிக்கொள்வதில்லை.

தற்போதைய நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்க ஒரு கட்சியாலோ தனித் தலைவராலோ முடியாது. இலங்கையர்கள் என்ற அடிப்படையில் ஒன்றிணைந்து தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டும் என்றார். (ம-7)

## டலஸிற்கு...

மேலும் இலங்கை மக்கள் காங்கிரஸூம் டலஸிற்கு ஆதரவு வழங்கியுள்ளது.

அத்துடன், முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் என்பனவும் டலஸுக்கு ஆதரவு வழங்கவுள்ளன.

மேலும், டலஸ் அழகப்பெருமவிற்கு வாக்களிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது. (ம-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 19/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1299
வெற்றி இலக்கங்கள்
கன்னி 0 8 5 3 1 5
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2022.07.19
சீட்டிழுப்பு இலக்கம் 3063
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 25 64 69 74
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 19/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1169
வெற்றி எழுத்து I
சுப்பர் இலக்கம் 03
வெற்றி இலக்கங்கள் 01 17 28 49

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.07.19
சீட்டிழுப்பு இலக்கம் 130
கும்பம் 06 20 39 47 கும்பம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/07/19
சீட்டிழுப்பு இலக்கம் 4821
V 1 4 0 0 7 3
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2022.07.19
சீட்டிழுப்பு இலக்கம் - 851
Z 11 14 25 49
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1622
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.07.19
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,212,420/-
வெற்றி இலக்கங்கள் 08 44 56 65 V

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.07.19
சீட்டிழுப்பு இல : 3957
வர்ணம் : இள நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,620,220/-
வெற்றி இலக்கங்கள் 13 63 65 75 Q
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 198
சீட்டிழுப்பு திகதி 2022.07.19
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 05 23 28
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,533,200/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,663,942/-
திகதி 2022-07-19
வெற்றி வாரம் 3508
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 04 22 27 28
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 6,221,400/-

12 சப்பிரி
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 24 01 13 16 45
சீட்டிழுப்பு வாரம் 972
வர்ணம் இளஞ்சிவப்பு
திகதி 2022.07.19 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 248,553,583/-
தொலைபேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1796
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.07.19
தினம் செவ்வாய்க்கிழமை
Y 08 21 59 73
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,957,320/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் QR கோட் விற்பனை

(யாழ்ப்பாணம்)

எரிபொருளுக்கான தேசிய பாஸ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள நிலையில், பாஸை அடையாள அட்டை போன்றும் கீ டேக் போன்றும் செய்து கொடுத்து கட்டணம் அறவிட்டு வருகின்றனர்.

யாழில் உள்ள ஒருவர் QR கோட்டினை வாகன திறப்புக்களில் மாட்டிவிடக் கூடியவாறாக கீ டேக் வடிவில் செய்து கொடுக்கின்றார். அதற்காக 600 ரூபாயினை அறவீடு செய்கின்றார். (ம-7)


## துவிச்சக்கரவண்டி மூலம் பத்திரிகை விநியோகிக்க ஆட்கள் தேவை

வட்டக்கச்சி, உருத்திரபுரம், அக்கராயன் (அம்பலப்பெருமாள் சந்திவரை)

ஆகிய இடங்களுக்கு துவிச்சக்கரவண்டி மூலம் வலம்புரிப் பத்திரிகை விநியோகிப்பதற்கு ஆட்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

**076 097 3121**

பொது முகாமையாளர், வலம்புரி

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதான உயர் வருமானம் பெறும் மணமகனுக்கு மணமகள் தேவை. உத்தியோகம் பார்க்காத சைவபோசன மணமகள் விரும்பத்தக்கது. (சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை) (12182)

தொடர்பு **077 116 5961**

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12184)

**076 825 7716** (ஆகாஸ்)

## காணி விற்பனைக்கு

**யாழ். நாவற்குழி சந்தியில் 87 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை நான்கு இலட்சம் (400,000/=) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- பார்வையிடும் நேரம் : காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(12186)

**076 490 5403, 076 491 2493, 076 490 6029**

## விற்பனைக்கு உண்டு

ஏழாலை தெற்கில் சகல வசதிகளுடன் கூடிய மருந்தகம் விற்பனைக்குண்டு. (12190)

தொடர்பு **076 637 8849**

## காணி விற்பனைக்கு

58/1, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (பலாலி வீதி, திருநெல்வேலி கெற்றப்போல் சந்தியிலிருந்து பழம் வீதியில் சுமார் 200 m தூரம் அளவில்) (C-4629)

தொலைபேசி: **077 977 3732**

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS** (C-4608)

எமது கிளைகள்: கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு • சங்கானை • மருதங்கேணி • திருகோணமலை

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**

- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-4608) **V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் சதாசிவம் சிவஞானசுந்தரம்

தோற்றம் 02.11.1944 — மறைவு 20.06.2022

கடந்த 20.06.2022 (திங்கட்கிழமை) அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து எமது இல்லத்திற்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் உலகின் பல பாகங்களில் இருந்து தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மூலமாக அனுதாபங்களை பகிர்ந்து கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி சுவரொட்டிகள், பதாகைகள், மலர் வளையங்கள் மூலமாக அனுதாபங்களை பகிர்ந்து கொண்டவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றியவர்களுக்கும் இக்கணம் வரை எமது தேவைகளை பூர்த்திசெய்து தோளோடு தோள் நின்ற அன்புள்ளங்களுக்கும் இவ்வேளையில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20.07.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

12/1, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர் (சி.வசிதரன் நியூ சிற்றி ரெக்ஸ் (Pvt) Ltd ஐடியாஸ், யுனிமெக்ஸ், சிற்றிமார்க்)

021 222 2502, WhatsApp - 077 723 0104

(12186)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.